# பதினெண்கீழ்க்கணக்கு உணர்த்தும் பழந்தமிழர் வாழ்வு முறைகள்

முனைவர் ஜெ.ராஜசெல்வி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை(சுயநிதிப்பிரிவு)
காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி.

11

ஆய்வுச்சுருக்கம்
இலக்கியங்களே மனித வாழ்க்கையை பிரதிபலிக்கின்றன. சமூகத்தின் வாழ்வியல் வழிகாட்டியாக விளங்குவது தமிழ் இலக்கியங்களே ஆகும். இலக்கியம் மனிதனின் மொழியோடு தொடர்பு கொண்டு ஒரு குறிப்பிட்ட வடிவம் பெறுகின்றது. இலக்கியங்கள் மனித சமுதாயத்தையும் அச்சமுதாயத்தில் நிலவி வரும் வாழ்வியல் கூறுகளையும் மையமிட்டு காலந்தோறும் எழுந்த வண்ணம் உள்ளன. சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகும்.

'பதினெண்கீழ்க்கணக்கு உணர்த்தும் பழந்தமிழர் வாழ்வு முறைகள் ' என்னும் இவ்வாய்வின் வழியாக மூதாதையர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தன்னுடைய நலம் என்று ஆங்கே ஐந்து இடங்களிலும் நல்லாற்றில் நின்று பேணிக்காத்தல் இல்லறத்தாரின் தலையாய கடமையாக நினைத்து வந்தனர் என்பதும், நல்ல விருந்தினரைக் காப்பது, கணவன் சொல் கேட்பது என்று இல்லறத்தைச் சிறப்பாக நடத்துவது மட்டுமல்லாமல் ஆண்களுக்குச் சமமாக பெண்களும் கல்வி கற்கும் உரிமையைப் பெற வேண்டும் என்பதையும், தாய் தந்தையரைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்னும் கருத்தும் விளக்கப்படுகின்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்து, இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது. இவை தாம் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச் சொல்லிக் கொடுக்கிறது. வாழ்க்கையையும் சொல்லிக் கொடுக்கிறது. இலக்கியம் என்னும் நிலையில் நின்றுவிடாமல் மனித வாழ்வியல் கூறுகளை காட்டும் பதிவுகளாகவும் அமைந்துள்ளன.
சராசரி மனிமன் அன்றாட வாழ்க்கையில் ஒழுகவேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகவும், மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர் உறைவிடமாகவும், வாழ்க்கை வழிமுறைகளுக்கான வழிகாட்டியாகவும் அமைந்துள்ளன. உயிரினத்தின் உச்சியில் வாழும் இன்றைய மனிதனை, அவனது வாழ்க்கையைப் பகுத்து நோக்கி, அறம், பொருள், இன்பம் ஆகிய முதன்மைப் பயனை அறியவைத்து, பயனுடைய வாழ்க்கையை வாழ பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வழிகாட்டுகின்றன. மனிதனின் உள்ளத்தை உறுதிப்படுத்தவும் வாழ்வியல் பொருண்மைத் தெளிவுபெறவும் இந்நூல்களின் கருத்துக்கள் ஊன்றுகோலாய் அமைந்திருக்கின்றன.

கலைச்சொற்கள்
மேற்கணக்கு – கீழ்க்கணக்கு – தெய்வ வழிபாடு - இல்லாள் கடமை – கணவன் குறிப்பறிதல் - இறைவரொடு ஒப்பர் - கல்வி அழகே அழகு – நாழிகைப் பொருத்தம் பார்த்தல் - கிரகணங்கள் - கார்த்திகை விழா கொண்டாடுதல் - உயிரைவிட மானமே பெரிது – மனிதத்தன்மை – ஓதலிற் சிறந்த ஒழுக்கம் - வாழ்க்கை நெறிப்பாடுகள்.

முன்னுரை
பண்பாடு என்பது முதலில் அடிப்படையில் நாம் வாழ்கின்ற முறைமை. இந்த வாழுகின்ற முறைமை என்பதனுள் வாழ்க்கையின் அனைத்தும் அடங்கும். அன்றாட வாழ்க்கை, உறவு முறைகள், விவாகம், பிள்ளை வளர்ப்பு, உணவு வகைகள், ஆடை ஆபரணங்கள், சடங்குகள் இவற்றின் வழியாகத்

தோன்றுகிற ஒரு மனநிலையே பண்பாடு ஆகும். ஒரு நிலையில் பண்பாடு என்பது ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், வாழ்வியல் வழிமுறைகள், சமூகக் கட்டமைப்பு என்பனவற்றைச் சுட்டி நிற்கின்றது.

எளியோரிடத்தும் இனிமையாகப் பேசுவதும், புதிதாக வந்த ஒழுக்கமுள்ள அயலாரை விருந்தோம்புவதும், இரப்போர்க்கு இடுவதும், இயன்றவரைப் பிறருக்கு உதவுவதும், கொள்கையும் மானமும் கெடின் உயிரைவிடுவதும் தமிழரின் பண்பாட்டுக் கூறுகளுள் குறிப்பிடத்தக்கவை. அவ்வகையில் பழந்தமிழரின் பண்பட்ட வாழ்வினை பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் வழி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

சங்க இலக்கிய மரபு அகம் புறம் சார்ந்தது. இவ்விரு மரபுகளை அடுத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் அறமரபு என்ற ஒன்று பரிணமித்தது. ஒரு மனிதன் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது சமுதாயத்தின் புறமானது இப்படித்தான் வாழ வேண்டும் எனக் கூறுவது ; சங்க நூல்கள் பெரும்பாலும் காதலைப் பற்றியும் அரசியலைப் பற்றியுமே வலியுறுத்திக் கூறுகின்றன. இவ்விரண்டைத் தவிர அறநெறி சார்ந்த செய்திகள், நல்லொழுக்கம் சார்ந்த செய்திகள், நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் சார்ந்த செய்திகளும் ஆங்காங்கே கலந்து காணப்படுவதைக் காண முடிகின்றது. ஆனால் நல்லொழுக்கம் சார்ந்த நீதிகளை மட்டும் எடுத்துக்கூறும் நூல்கள் தனியாக காணப்படுவதில்லை. முதன்முதலில் ஒழுக்கத்தைப் பற்றி தனித்தனியாக எழுதப்பட்ட நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களே ஆகும். பதினெட்டு நூல்களில் நீதியை வலியுறுத்தும் நூல்கள் பதினொன்று ஆகும். சங்க இலக்கியங்களில் இல்லாத நீதியை மட்டும் எடுத்தாளும் தனித்துவமிக்க நூல்களாக பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அமைந்திருக்கின்றன.

பாடல்களில் அதிக அடிகளைக் கொண்ட நூல்களுக்கு மேற்கணக்கு என்றும், குறைந்த அடிகளைக் கொண்ட நூல்களுக்கு மேற்கணக்கு என்றும் பெயர் வைத்தனர். இரண்டு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை அமைந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான பதினெட்டு நூல்களும் கீழ்க்கணக்கு நூல்களாகும். கீழ்க்கணக்கு நூல்கள் எவை எவை என்பதை,

'நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்
பால் கடுகம் கோவை பழமொழி மா மூலம்
இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலையும் ஆம்கீழ்க் கணக்கு'

என்னும் வெண்பாவால் அறியலாம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஒவ்வொன்றும் பண்டைக்கால மக்களிடையே காணப்பட்ட நீதி வழுவாத பண்பையும், அறக்கருத்துக்களையும் மனிதன் தாம்வாழும் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளையும் அக்கால மக்கள் தம் வாழ்க்கையில் பின்பற்றிய நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் போன்றவற்றை எடுத்துக் கூறுகின்றன. மேலும் இந்நூல்கள் ஒவ்வொருவரின் வாழ்வையும் செம்மைப்படுத்தி இருப்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

தெய்வ வழிபாடு

தேவர்கள் வானுலகில் வாழ்கின்றவர்கள். அவர்கள் எல்லா வல்லமையும் படைத்தவர்கள். அவர்களை வணங்கி வழிபாடு செய்தால் விரும்புவதை அடையலாம் என்ற நம்பிக்கை தமிழர்களிடம் இருந்து வருகின்றது. தெய்வங்களைப் பலவகைகளில் மக்கள் வணங்கி வருகின்றனர். சாம்பிராணி, தசாங்கம், குங்கிலியம் முதலிய மணம்மிக்கப் பொருள்களைக் கொண்டு வழிபடுவது தமிழரின் பண்பாடு என்பதை,

"புகழ் மிகு சாந்து எறிந்து, புல்எரி ஊட்டிப்

புகை கொடுக்கப் பெற்ற புலவோர் - துகள் பொழியும்
வான் உயர் வெற்ப! இரவின் வரல் வேண்டா
யானை உடைய சுரம்"

திணைமொழி ஐம்பது, பக். 1

என்ற பாடல் வழி அறியலாம். சந்தனக் கட்டையை வெட்டிக்குவித்து நெருப்புட்டி அப்புகையால் தேவர்களை வணங்குகின்றனர். இப்புகையைப் பெற்ற தேவர்கள் மழையைப் பொழியச் செய்கின்றனர் என்பதே மேற்கண்ட பாடலின் பொருளாகும். இதனால் மழை வேண்டித் தெய்வத்தை வணங்கும் முறை இருந்தது என்பதை அறிய முடிகிறது.

இல்லறமும் மக்கட்பேறும்

குடும்பத்தை நடத்தும் பொறுப்பு முழுவதும் பெண்களைச் சார்ந்தது. இல்லாளின் கடமையைப் பற்றி சிறுபஞ்சமூலம்,

"வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித் - திருவாக்குந்
தெய்வத்தையும் எஞ்ஞான்றுந் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு"

சிறுபஞ்சமூலம், பக். 45

என்னும் பாடல் அடிகள் கூறுகின்றன. தன் கணவனுடைய வருமானத்தின் அளவைத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த வருமானத்திற்குத் தகுந்த அளவிலே செலவு செய்ய வேண்டும். சுற்றத்தார்கள் மேல் கோபப்படாமல் அவர்களை அன்புடன் நடத்த வேண்டும். செல்வத்தைக் கொடுக்கும் தெய்வத்தை எந்நாளும் வணங்க வேண்டும் என்பதே பாடலின் பொருளாகும். இல்லறத்திலே இன்பம் தழைக்க வேண்டுமாயின் இல்லாள் கற்புடையவளாக இருக்கவேண்டும். தன் கணவனுக்குத் தாயாகவும், மனைவியாகவும் இருந்து உதவி செய்வதே கற்புள்ள பெண்ணின் கடமை என்னும் கருத்தைத் திரிகடுகம்,

"நல்விருந் தோம்பலின் நட்டாளாம் வைகலும்
இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்
கற்புடை யாள் கடன்"

திரிகடுகம், பக். 60

என்னும் பாடல் அடிகளால் விளக்குகிறது.

தாய் தந்தையரைப் போற்றி வாழவேண்டும் என்பதே சிறந்த அறப்பண்பு என்பதை,

"எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை இனிது"

இனியவை நாற்பது, பக். 27

என்ற பாடல் அடியால் அறியலாம்.

விருந்தோம்பல்

திருவள்ளுவர்,

"செல்விருந்து ஓபி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

திருக்குறள், பக். 44

என்னும் குறள் வரிகளில் வந்த விருந்தினரைப் போற்றி, இனிவரும் விருந்தினரை எதிர் பார்த்திருப்பவன், வானுலகத்தில் உள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினனாவான் என்று விருந்தோம்பல் பற்றி குறிப்பிடுகிறார்.

ஆசாரக்கோவையில் உணவு உண்ணும்போது கடைபிடிக்க வேண்டிய நெறிகளைப் பற்றி 11 பாடல்களில் சொல்கிறது. இங்கு விருந்தோம்புவதற்கு உணவு இன்றியமையாமை என்பதால் நெறிகள் சொல்லப்படுகின்றன. உண்ணும்முன் நீராடிக் கால்கழுவி, வாயைத் துடைத்து, உண்ணும் கலத்தைச்சுற்றி நீர்தெளித்து உண்ணவேண்டும் என்றும், உண்ணும் பொழுது கிழக்கு நோக்கி அமர்ந்து, ஆடாமல் அசையாமல் நன்றாக அமர்ந்து வேறு எதையும் பார்க்காமல், பேசாமல் உணவைத் தொழுது சிந்தாமல் உண்ணவேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றது. இத்தகைய உணவில் கறிவகைகளை உண்ணும் பாங்கும் மொழியப்படுகின்றன. இனிப்புப் பண்டங்களை முதலிலும், கசப்பான உணவு வகைகளைக் கடைசியிலும், எஞ்சிய பொருள்களை இடையிலும் முறைப்படி உண்ண வேண்டும் என்பதை,

"கைப்பன வெல்லாங் கடைதலை தித்திப்ப
மெச்சும் வகையா லொழிந்த விடையாகத்
துய்க்க முறைவகையா லூண்"
ஆசாரக்கோவை, பக். 23

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது.

பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்

ஒரு தனிமனிதனோ, ஒரு சிலரோ, பலரோ, இனமோ, குழுவோ, நாடோ ஒரு பழக்கத்தை நிலையாகத் தொடர்வது பழக்க வழக்கமாகும். தமிழர்கள் தம் வாழ்க்கை முறையில் கொண்ட நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் குறித்து தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. பண்டைத் தமிழிலக்கியங்கள் அக்காலத் தமிழர்களின் பழக்க வழக்கங்களைப் பதிவுசெய்யும் கருவிகளாகவும் விளங்கின.

தும்மல் இயல்பாக வருவதன்று ; யாரோ நம்மை நினைப்பதனால்தான் தும்மல் வருகின்றது என்பது நம்பிக்கை. இந்நம்பிக்கையுள்ளவர்கள் இன்றும் இருக்கின்றனர். பண்டைத் தமிழர்களிடமும் இந்த நம்பிக்கை இருந்து வந்துள்ளது என்பதை ஐந்திணை எழுபது எடுத்துரைக்கின்றது. 'மலை வழியாகப் பல ஊர்களைக் கடந்து சென்ற நம் தலைவர் ஆந்தை அலறுவதாலும் அடிக்கடி நலமிக்க தும்மல்கள் தோன்றுவதாலும் களவொழுக்கத்தில் நம்மிடத்தில் கொண்ட அன்பு போல உன் கலக்கம் நீங்க மீண்டும் வருவார் ', எனத் தலைமகனின் வருகையை எதிர்பார்த்த தலைவிக்குத் தோழி கூறுவது போன்ற பாடலைக் காணமுடிகின்றது. பெண்களுக்கு இடது கண் துடித்தால் நன்மையுண்டு ; கனவுக்குப் பலன் உண்டு ; நெஞ்சத்திலே எழும் நினைப்பு காரணமாக உடம்பின் உறுப்புகளிலே மாற்றம் ஏற்படும் பல்லி சொல்வதற்குப் பலன் உண்டு ; இத்தகைய நம்பிக்கைகள் பழந்தமிழரிடம் இருந்தன என்பதை,

"---- ஆடும் கனவும் திருந்தின்
ஓங்கிய குன்றம் இறந்தாரை யாம் நினைப்ப,
வீங்கிய மென் தோள் கவினிப் பிணி தீர,
பாங்கத்துப் பல்லி படும்"
- பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், பக். 37

என்று ஐந்திணை எழுபது பாடலடிகள் உணர்த்துகின்றன.

சூரிய வெப்பத்தால்தான் நிலத்தில் உள்ள நீர் ஆவியாக மேலெழுந்து மேகமாகி மழை பெய்கின்றது

என்னும் உண்மையை,

"எல்லை தருவான்இ கதிர் பருகி யீன்ற கார்"

திணைமாலை நூற்றைம்பது, பக். 38

என்னும் பாடலடிகள் விளக்குகிறது.

சோழன் பகைவர்களை வென்ற களத்தில், புறங்காட்டி ஓடாத வீரர்கள், கூரிய வாளால் எப்போதும் அசைந்து கொண்டிருக்கும் தலையைக் கொண்ட யானைகளின் துதிக்கைகளை வெட்டினர். அவை தரையில் வீழ்ந்து கிடக்கும் வெண்கொற்றக் குடைக்கு அருகே வீழ்ந்து கிடந்தன. அக்காட்சி கதிர்நிறைந்த ஒளிவீசும் நிலவைத் தொட்டுச் சுவைக்கும் பாம்பைப் போன்றிருந்தது என்று குறிப்பிடுவதிலிருந்து பாம்பு பிடிப்பதனால் சந்திரகிரகணம், சூரியகிரகணம் ஏற்படுகிறதென்ற நம்பிக்கை பண்டைத் தமிழர்களிடம் இருந்து வந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. இதனைக் களவழி நாற்பது,

"கொடுகொ ளொண்மதியை நக்கும்பாம் பொக்குமே

கூடாரை அட்ட களத்து"

களவழி நாற்பது, பக். 23

என்னும் பாடல் எடுத்தியம்புகின்றது. இறந்த வீரர்களுக்கு அவர்களின் நினைவாக கல் நடுவார்கள். இது பண்டை வழக்கம். இதனை,

"... நடுகல்

விரி நிழல்இ கண்படுக்கும் வெங் கானம் என்பர்இ
பொருள் புரிந்தார் போய சுரம்"

பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், பக். 23

என்று ஐந்திணை ஐம்பது குறிப்பிடுகின்றது. வீரர்களுக்காக நடப்பட்டிருக்கும் கல்லின் விரிந்த நிழலிலே பேய் படுத்துறங்கும் கொடிய கானகம் என்பதே பாடலின் பொருளாகும். கனவிலே காணப்படுவது பொய்யன்று. அது பின்னால் நடைபெறுவதை முன்னே அறிவிக்கும் அறிகுறியாகும். கனவில்லாமல் ஒரு நிகழ்ச்சியும் நடைபெறாது என்பதை,

"வினா முந்துறாத உரையில்ல் இல்லை

கனா முந்துறாத வினை"

பழமொழி நானூறு, பக். 16

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

நீதி தவறாமை

அரசாள்வோருக்கு அறிவுறுத்தும் அறவுரைகளை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் வலியுறுத்துகின்றன. நாடாளும் மன்னவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் ஒற்றர்களைக் கொண்டும் நாட்டிலே நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்ளுதல் சிறந்தது; நீதி வழங்குவதற்கு முன்பே, தான் நன்றாக ஆராய்ந்து உண்மையறிந்து நீதி வழங்குவதே சிறந்தது ; ஒரு சார்பிலே நிற்காதவனாய், எல்லா உயிர்களிடத்தும் சமமான நிலையில் நின்று, எல்லோரிடத்திலும் உள்ள நன்மை தீமைகளை அறிந்து கொள்ளுவதே வேந்தர்களின் கடமை என்பதை இனியவை நாற்பது,

"ஒற்றினா னொற்றிப் பொருடெரிதன் முன்னினிதே

முற்றான் றெரிந்து முறைசெய்தன் முன்னினிதே
பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்
வெற்றிவேல் வேந்தர்க் கினிது"

இனியவை நாற்பது, பக். 46

என்று சுட்டுகிறது.

அரசன் நீதியுடன் நடந்தால்தான் நாடு செழிக்கும் குடிகள் இன்புறுவர் ; கொடுமைகளை நீக்கிக் குடிகளுக்கு நன்மை செய்கின்றவனே அரசன் ஆவான் ; தான் வாங்கிக் கொள்ளும் பொருளுக்கு ஆசைப்பட்டுக் குடிகளைக் கொடுமைப்படுத்தும் அரசன் உள்ள நாட்டிலே மழை பெய்யாது என்னும் கருத்துக்களையும் உணர்த்துகிறது. மக்களின் தீமைகளை அழித்து, நன்மைகளைச் செய்யும் அரசன், 'பெய்' என்று சொன்னால் மழை பொழியும் என்று திரிகடுகம் கூறுவதிலிருந்து அரசனின் கடமைகளை அறியமுடிகிறது. இதை,

" ... கொடிதொரீஇ

நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்இ

பெய்யெனப் பெய்யும் மழை"

திரிகடுகம், பக். 83

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன.

தன்மானத்துடன் வாழாதவன் மனிதன் அல்லன். தன்மானமே உயிர் எனக் கொண்டவன்தான் மக்களால் மதிக்கப்படுவான். தன்மான உணர்ச்சி எல்லா மக்களிடமும் உண்டு. சிலர் அவ்வுணர்ச்சியை எச்சமயத்திலும் இழந்துவிடுவதில்லை. சிலர் ஆபத்தும் மனச்சோர்வும் ஏற்படும்போது, அவ்வுணர்ச்சியை விட்டுவிடுகின்றனர். எச்சமயத்திலும் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதே மனிதத்தன்மை என்பதை இனியவை நாற்பது,

"உயிர்சென்று தான்படினு முண்ணார்கைத் துண்ணாப்

பெருமைபோற் பீடுடைய தில்"

இனியவை நாற்பது, பக். 20

என்னும் பாடல் அடிகளில் உணர்த்துகின்றது.

ஓதலின் சிறந்த ஒழுக்கம்

வாழ்வியல் ஒழுக்கம் என்பது நற்பண்பாகும். நல்ல நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தால் வாழ்வில் மேம்பட்ட மனிதராக வாழமுடியும். தனிமனித ஒழுக்கமே சமூகம் மேம்பட அடிப்படைக் காரணமாக அமையும். தனிமனித வாழ்வியல் ஒழுக்கத்தை அனைத்து அற இலக்கியங்களும் முதன்மைப்படுத்துகின்றன. ஒழுக்கத்தைவிட உயர்ந்தது ஒன்றுமில்லை என்பதை பழமொழி நானூறு,

"இழுக்கத்தின் மிக்க இழிவு இல்லை இல்லை

ஒழுக்கத்தின் மிக்க உயர்வு"

பழமொழி நானூறு, பக். 18

எனக் கூறுகிறது. நல்லொழுக்கமே செல்வம் என்கிறது நான்மணிக்கடிகை. அதே வேளையில் ஒழுக்கம் தவறியவர்களிடத்துச் செல்வம் தங்காது என்றும் பகர்கிறது. இதனை,

"திருவுந் திணைவகையான நில்லார்ப் - பெருவலிக்

கூற்றமுங் கூறுவ செய்துண்ணாது"

நான்மணிக்கடிகை, பக். 37

என்னும் பாடல் வழி அறியலாம்.

முடிவுரை

'பதினெண் கீழ்க்கணக்கு உணர்த்தும் பழந்தமிழர் வாழ்வு ' என்னும் இவ்வாய்வின் வழியாக பழந்தமிழர்கள் சாம்பிராணி, தசாங்கம், குங்கிலியம் முதலிய மணம் மிக்கப் பொருளைக் கொண்டு வழிபட்டு வந்தனர் என்பதும், மழை வேண்டித் தெய்வத்தை வணங்கும் முறை இருந்தது என்பதும் சான்றுகள் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

கோடை காலத்தில் தன்னிடம் சேர்ந்தவர்களுக்கெல்லாம் நிழலைத் தருகிற மரத்தைப் போலே, பலருக்கும் பயன்தரும்படி வாழ்வதே நற்குணமுள்ள ஆண்பிள்ளைக்குக் கடனாகும் என்னும் அறக்கருத்தும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பவர்கள்தாம் மறுமையின்பத்தைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையும் தமிழரிடம் இருந்து வந்துள்ளது என்ற செய்தியும், அன்பில்லாதவர், பகைவர், மதியாதார், விரும்பாதவர் இல்லத்தில் விருந்து உண்ணக்கூடாது என்னும் கருத்தும், விருந்தினரை ஓபும் முறையும், உணவு உண்ணும் முறை, விருந்தோம்பலின் சிறப்புக்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

பழந்தமிழர்கள் நாள்பார்த்து நல்லநேரத்திலே திருமணம் புரியும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர் என்பதும், கார்த்திகை விழாவைக் கொண்டாடியுள்ளனர் என்பதும், சூரியகிரகணம், சந்திரகிரகணம் இருந்தன என்பதும், கனவு என்ற நம்பிக்கை இருந்து வந்ததும், நடுகல் நடும் வழக்கம் இருந்ததும் ஆய்வின் வழி புலனாகின்றது.

துணைநின்ற நூல்கள்

1.திருக்குறள் - பரிமேலழகர் (உ.ஆ), ராம் பிரசுரம், சென்னை.
2.நாலடியார் - ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ), உமா பதிப்பகம், சென்னை
3.பழமொழி நானூறு – சி.ர.கோவிந்தராசன் (உ.ஆ), கலையரசி பதிப்பகம், சென்னை.
4.நான்மணிக்கடிகை – தி.சு.பாலசுந்தரம் (உ.ஆ), கழக வெளியீடு, திருநெல்வேலி.
5.இனியவை நாற்பது – வா.மகாதேவ முதலியார் (உ.ஆ), கழக வெளியீடு, திருநெல்வேலி.
6.இன்னா நாற்பது – ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ), கழக வெளியீடு, திருநெல்வேலி.
7.களவழி நாற்பது - ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ), கழக வெளியீடு, திருநெல்வேலி.
8.ஆசாரக்கோவை - பு.சி.புன்னைவனநாதன் (உ.ஆ), கழக வெளியீடு, திருநெல்வேலி.
9.திணைமொழி ஐம்பது – மணி.திருநாவுக்கரசர் (உ.ஆ), கழக வெளியீடு, திருநெல்வேலி.
10.பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும் - சாமி.சிதம்பரனார் (உ.ஆ), அறிவு பதிப்பகம், சென்னை.